# இராமேஸ்வரம் நகர் மன்றகூட்டம்

## 2018 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28ம் தேதிகாலை 11 : 00 மணிக்கு நடைபெற்ற நகர்மன்றக் கூட்ட நடவடிக்கை

## முன்னிலை: அ. வீரமுத்துகுமார் B.Tech., தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர், இராமேஸ்வரம் நகராட்சி

| பொருள் எண் | பொருள்விபரம் | தீர்மானவிபரம் |
|---|---|---|
| 1 | இராமேஸ்வரம் நகராட்சியில் புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றத்திற்கான அடல் மிஷன் திட்டம் AMRUT 2017-20-க் கீழ் வார்டு எண் 19, ஓலைக்குடா பூஙகாவில் பசுமைப்பரப்புடன் கூடிய பூஙகா அமைக்கும் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண் 3642/2016/145083 நாள் 18.12.17–ன் படி ரூ.232.591 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழஙகி உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தின் கீழ் ரூ.232591 இலட்சத்திற்கான பசுமைப்பரப்புடன் கூடிய பூஙகா அமைக்கும் பணிக்கு 22.02.18 க்கு 2–வது முறையாக மின்னணு வாயிலாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் நேரடியாக மட்டும் (Offline & Online) இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கலந்தாய்வுக் குழு மூலம் 23.02.18 அன்று தகுதி காண் பட்டியல் தயார் செய்ததில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளுக்கும் தொழில்நுட்ப தகுதிகள் இருந்ததால் 26.02.18 அன்று விலைப்பட்டியல் அடஙகிய உறை (Price bid) பிரிக்கப்பட்டு , ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் | தீர்மானம் எண். 93<br>அனுமதிக்கப்பட்டது. |

கீழ்க்கண்டவாறு விலைவிகிதம் வரப்பெற்றன.

| | | |
|---|---|---|
| 1. | திரு. M.K. திருமுருகன்,<br>ஒப்பந்ததாரர்,<br>வடக்கு புதுத்தெரு,<br>இராமநாதபுரம். | மதிப்பீட்டைக் காட்டிலும் 4.95% அதிகம். |
| 2. | திரு. K. பெரியகருப்பன்<br>ஒப்பந்ததாரர்,<br>தேவகோட்டை. | மதிப்பீட்டைக் காட்டிலும் 7.41 %அதிகம். |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் தெளிவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.M.K. திருமுருகன் (மதிப்பீட்டைக் காட்டிலும் 4.95% அதிகம்) ஒப்பந்ததாரரை விலை விகிதத்தினை குறைத்து தருமாறு கடிதம் 26.02.18 கோரியதில் ஒப்பந்ததாரர் 4.95% அதிகம் என்ற விலை விகிதத்தில் இருந்து 4.80% அதிகம் விலை விகிதத்தில் செய்து தருவதாக 27.02.2018–ல் சம்மதக்கடிதம் கொடுத்துள்ளார்.

மேற்கண்ட பணியானது திட்டப்பணியாக இருப்பதால் பணியை விரைவாக உரிய காலத்தில் முடிக்கும் பொருட்டும் குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள (மதிப்பீட்டைக் காட்டிலும் 4.80%அதிகம்) திரு. M.K. திருமுருகன் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

- மன்றம் அனுமதிக்கலாம்.
- மேற்கண்ட திட்டப்பணிகள் அவசியத்தைக் கருத்தில் கொண்டும் பணியினை விரைவாக

<table>
<tr><td></td><td>உரிய காலத்தில் முடிக்கும் பொருட்டும் திரு. M.K. திருமுருகன் ஒப்பந்ததாரரின் மதிப்பீட்டினைக் காட்டிலும் 4.80% கூடுதல் என்ற விலை விகிதத்தினை ஏற்கலாம்.</td><td></td></tr>
<tr><td>2</td><td>நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண் 14989/ 1/2016–நாள் 22.01.17ன் படி இராமேஸ்வரம் நகராட்சிக்கு 14வது மத்திய நிதிக்குழு பரிந்துரை நிதியின் கீழ் (2018–19) ரூ.156.62 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தின் கீழ் இந்நகராட்சியில் சாலைப்பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு ரூ.120.00 இலட்சத்திற்கு இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.68 நாள் 19.10.2017 ல் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதன் பேரில் திருவள்ளுவர் நகர் முதல் தீட்சதர்கொல்லை வரை பேவர் இயந்திரம் மூலம் தார்சாலை அமைக்கும் ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டிலான சாலைப் பணிக்கு 17.01.2018 அன்று முதன் முதலாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.<br><br>
<table>
<tr><td>1</td><td>திரு. M.K. திருமுருகன்,<br>ஒப்பந்ததாரர்,<br>இராமநாதபுரம்.</td><td>மதிப்பீட்டைக் காட்டிலும் குறைவு.</td></tr>
<tr><td>2</td><td>திரு. P.N. சுந்தரம்,<br>ஒப்பந்ததாரர்,<br>இராமேஸ்வரம்.</td><td>மதிப்பீட்டைக் காட்டிலும் அதிகம்.</td></tr>
</table>
மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினைக் காட்டிலும் குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. M.K. திருமுருகன் ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>
<u>அலுவலகக்குறிப்பு:</u></td><td>தீர்மானம் எண். 94<br><u>அனுமதிக்கப்பட்டது.</u></td></tr>
</table>

<table>
<tr><td></td><td>மன்றம் அனுமதிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td>3</td><td>இராமேஸ்வரம் நகராட்சிக்கு 14வது மத்திய நிதிக்குழு பரிந்துரை நிதி 2017–18–ன் கீழ் ரூ.156.92 இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண் 14989/P1/2016–2 நாள் 22.09.2017ன் படி ஒதுக்கீடு செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மற்றும் மண்டல செயற்பொறியாளர் மதுரை அவர்களின் அறிவுரையின்படி ஆணையர் மற்றும் பொறியாளருடன் நகராட்சிக்குட்பட்ட பகுதிகள் ஆய்வு செய்யப்பட்டதை தொடர்ந்து கீழ்க்கண்டவாறு பணிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளது.<br><br>
<table>
<tr><th>வரிசை எண்</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீட்டு தொகை ரூ இலட்சத்தில்</th></tr>
<tr><td>1.</td><td>காந்தி நகர் முதல் திருவள்ளுவர் நகர் வரை பேவர் இயந்திரம் மூலம் தார்தளம் அமைத்தல்</td><td>30.00</td></tr>
<tr><td>2.</td><td>திருவள்ளுவர் நகர் முதல் தீட்சதர் கொள்ளை வரை பேவர் இயந்திரம் மூலம் தார்தளம் அமைத்தல்</td><td>20.00</td></tr>
<tr><td>3.</td><td>அக்னிதீர்த்த கடற்கரை முதல் ஓலைக்குடா விருந்தினர் மாளிகை வரை பேவர் இயந்திரம் மூலம் தார்தளம் அமைத்தல்</td><td>20.00</td></tr>
<tr><td>4.</td><td>காட்டுப்பிள்ளையார் கோவில் முதல் லெட்சுமி நகர் வரை</td><td>30.00</td></tr>
</table></td><td>தீர்மானம் எண். 95<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | சிமிண்ட் தளம் அமைத்தல் | |
| 5. | வார்டு எண்:15 சல்லிமலை காளிகோவில் பிரதான சாலையில் சிமிண்ட் சாலை அமைத்தல் | 20.00 |
| | மொத்தம் | 120.00 |

தேர்வு செய்யப்பட்ட 5 பணிகளில் வரிசை எண்:3ம் எண் பணியானது மேதகு இந்திய ஜனாதிபதி அவர்களின் வருகையை முன்னிட்டு நடைபெற வேண்டிய பணியாக இருப்பதால் மேற்காணும் பணிக்கு 05.12.17 ஆம் தேதியில் குறுகியகால ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளின் விவரம் மன்றத்தின் பார்வைக்கு

| | | |
|---|---|---|
| 1 | திரு. M.K. திருமுருகன்,<br>ஒப்பந்ததாரர்,<br>இராமேஸ்வரம். | மதிப்பீட்டைக் காட்டிலும் 0.01 % குறைவு. |
| 2. | திரு. P.N. சுந்தரம்,<br>ஒப்பந்ததாரர்,<br>இராமேஸ்வரம். | மதிப்பீட்டைக் காட்டிலும் % அதிகம். |

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

- வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைக் காட்டிலும் % குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு. M.K. திருமுருகன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
- மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலர்/ஆணையாளர், இராமேஸ்வரம்.

| | | |
|---|---|---|
| 4 | இராமேஸ்வரம் நகராட்சி வார்டு எண் 1 முதல் 21க்குட்பட்ட தெருக்களில் அமைந்துள்ள தெருமின் விளக்குக்ள் மற்றும் உயர்மறட்ட கோபுரவிளக்குகள் ஆகியவற்றினை சரிவர ஒளிரச்செய்திட தேவையான உதிரிபாகஙகள் மற்றும் CFL பிட்டிஙகுகள் வாஙகிட ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:**<br><br>ஒப்புதல் அளிக்கலாம். | **தீர்மானம் எண். 96 அனுமதிக்கப்பட்டது** |
| 5 | மத்திய அரசின் சுற்றுலா துறையின் கீழ் "Swadesh Darshan" திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில், கீழ்க்கண்ட பகுதிகளில் அமைந்துள்ள கடற்கரை பகுதிகளில் சுற்றுலா பயணிகளின் வசதிக்காக மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.<br><br>1. சென்னை மெரினா கடற்கரை மற்றும் பெசன்ட் நகர் கடற்கரை<br>2. மாமல்லபுரம்<br>3. இராமேஸ்வரம்<br>4. மணப்பாடு (தூத்துக்குடி மாவட்டம்) மற்றும்<br>5. கன்னியாகுமரி<br><br>மேற்படி கடற்கரை சுற்றுலா சுற்றமைப்பு (Coastal Tourism Circuit) பகுதிகளில் மேம்பாட்டு பணிகள் செய்ய உரிய திட்ட மதிப்பீடு தயார் செய்யும் பணியினை M/s Darashaw & Company Pvt Ltd., என்ற நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டு, மேற்படி நிறுவனத்தின் மூலம் கீழ்க்கண்டவாறு மதிப்பீடுகள் | **தீர்மானம் எண். 97 அனுமதிக்கப்பட்டது** |

தயார் செய்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

| S.No | Proposed Components | Units | | Cost Rs |
|---|---|---|---|---|
| 1. | Drinking Water Kiosk | 4 | Nos. | 6817978.00 |
| 2. | Public Convenience | 1 | Nos. | 7454459.00 |
| 3. | Solid waste bins | 75 | Nos. | 470820.00 |
| 4. | Illumination | 85 | Nos. | 3791340.00 |
| 5. | Car parking Development | 1 | Nos. | 8743002.00 |
| 6. | Jogging and Walking Track | | | |
| a | Pedestrian Footpath | 730 | M | 5446043 |
| 7. | Information Signage- Backlit Totem | 30 | Nos. | 2533153.00 |
| 8. | First aid kiosks | 1 | Nos. | 902194.50 |
| 9. | Last Mile Connectivity – BT Road | 1300 | | 34682586.30 |
| a | Development of Bus-Shelter | 1 | Nos. | 472000.00 |
| b | Battery Cars | 3 | Nos. | 1829295.00 |
| 10. | Sea View seating Plaza & Landscaping | | | |
| a | Park Development | 565 | Sq.m | 6722254.64 |

| | | | | |
|---|---|---|---|---|
| b | Construction Of Heritage Structure | 1 | Nos. | 1040479 |
| 11. | Landscaping | | | |
| a | Changing room | 2 | Nos. | 2060688.00 |
| b | Children’s Play Area | 2 | Nos. | 1393191.00 |
| c | Rubble Masonry work near Agni Theertham Steps | 1 | Nos. | 2164740.00 |
| d | Application of Cold plastic Paint near Agni theertham steps | 1 | Nos. | 8894100.00 |
| | Total Work Value | | | 9541835.00 |
| | Total Cost in Rs.Lakhs | | | 954.18 |

மேற்படி மதிப்பீடுகளை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களிடம் நேரடியாக ஒப்புதல் பெறும்பொருட்டு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களுடன் நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு செல்லப்பட்டது. இராமேஸ்வரம் தீவு மேம்பாட்டுக்குழு கூட்டத்தில் தீர்மானித்தபடி அக்னி தீர்த்தம் கடற்கரை பகுதியில் மேற்படி நிதி ஒதுக்கீட்டில் கண்டுள்ள அனைத்து பணிகளையும் செய்வதற்கு பதிலாக தேவையான பணிகளை மட்டும் அக்னி தீர்த்தம் பகுதியில் மேற்கொண்டும், புதிதாக சாலை அமைக்கப்பட்டு யாத்திரீகர்கள் மற்றும் சுற்றுலாப்பயணிகள் செல்லும் தனுஷ்கோடி பகுதியில்

எவ்வித அடிப்படை வசதிகளும் இல்லாததினால், மீதமுள்ள பணிகளை தனுஷ்கோடி பகுதியில் மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது. இதன்படி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் மேற்படி திட்ட ஒதுக்கீட்டில் முதற்கட்டமாக அக்னி தீர்த்தக்கடற்கரையில் மேற்கொள்ளப்படவுள்ள பணிகளுக்கு தொழில்நுட்ப அனுமதி பெற நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தியதின் படி, M/s Darashaw & Company Pvt Ltd., நிறுவனத்திற்கு மதிப்பீடுகளில் சில மாற்றங்கள் செய்து மீள சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டது. இதன்படி கீழ்கண்டவாறு முதற்கட்டமாக அக்னி தீர்த்த கடற்கரையில் மேற்கொள்ளப்படவுள்ள பணிகளின் விபரம் கீழ்கண்டவாறு பெறப்பட்டுள்ளது.

| S.no | Project components | Unit | | Final Amount |
|---|---|---|---|---|
| 1 | Drinking Water Kiosk | 4 | Nos. | 6,845,000 |
| 2 | Public Convenience with clock room | 1 | Nos. | 6,500,000 |
| 3 | Solid Waste Bins & Compactor Bins | 170 | Nos. | 1,470,000 |
| 4 | Illumination- Replacement of LED Lights | 83 | Nos. | 3,715,000 |
| 5 | Car Parking Development with compound wall & Shops(10) | 1 | Nos. | 15,110,000 |
| 7 | Information Signage– Backlit TOTEM | 40 | Nos. | 3,545,000 |
| 8 | First Aid Kiosks | 1 | Nos. | 9,45,000 |
| 9 | Sea View seating Plaza & Landscaping | | | |
| | Construction of Heritage Structure | 1 | Nos. | 715,000 |
| 10 | Last Mile Connectivity | | | |
| | Development of Bus shelter | 1 | Nos. | 2,400,000 |
| | Procurement of Battery Cars | 5 | Nos. | 2,850,000 |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>11</td><td>Landscaping</td><td></td><td></td><td></td></tr>
<tr><td></td><td>Changing room</td><td>2</td><td>Nos.</td><td>2,090,000</td></tr>
<tr><td></td><td>Rubble Masonry work near Agni Theertham steps & Application of Cold Plastic Paint near Agni Theertham site</td><td>1</td><td>Nos.</td><td>3,553,000</td></tr>
<tr><td></td><td></td><td></td><td></td><td>49738000</td></tr>
<tr><td></td><td>Total Work Value</td><td></td><td></td><td>49738000</td></tr>
<tr><td></td><td>Total Work Value in Rs.Lakhs</td><td></td><td></td><td>497.38</td></tr>
</table>
மேற்படி பணிகளை மேற்கொள்வதற்கு நகர்மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு:
ஒப்புதல் அளிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>6</td>
<td>இராமேஸ்வரம் நகராம் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள இரண்டாம்நிலை நகராட்சி ஆகும். இந்நகராட்சி தற்போது 21 வார்டுகளை உள்ளடக்கியதாகவும் நகரப்பகுதி 53 ச.கி.மீ பரப்பளவில் 44.856 மக்கள் தொகையுடன் (2011 கணக்கெடுப்பின் படி) அமைந்துள்ளது. மேற்படி பரப்பளவில் 10 சதுர கி.மீ மக்கள் வசிக்கும் நகர பகுதியாகும். 107 தெருக்கள் அடஙகிய இந்நகரில் 11645 குடியிருப்புகள் உள்ளன. சுற்றுலாவும் மீன்வளமும் முதன்மை பணிவாய்ப்புகளாக உள்ளன. வாரணாசிக்கு இணையான புனித வழிபாட்டுத்தலமாக இராமேஸ்வரமும் இந்துக்களால்</td>
<td>தீர்மானம் எண். 98 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | கருத்தப்படுகின்றது.<br><br>இந்நகரம் இராமாயண கால வரலாற்றுத் தொடர்புடைய புண்ணியத்தலங்களில் சிவத்தலமாகவும், இராமேஸவரம் மூர்த்தி ஸ்தலம் ஆகிய முப்பெருமைகளையும் உடைய புண்ணிய பூமியாகவும் விளஙகுகிறது. நாள்தோறும் இந்தியாவின் பல பகுதிகளிலிருந்து மற்றும் வெளிநாட்டினரும் வருகை தரக்கூடிய புண்ணிய பூமியாகவும் உள்ளது. மேலும் நாள்தோறும் சுமார் 10000 யாத்ரீகர்களுக்கு மேல் வந்து வழிபடக்கூடிய புண்ணியஸ்தலமாகவும் இராமேஸ்வரம் இருந்து வருகிறது. மக்கள் இஙகு வந்து தீர்த்தத்தில் நீராடி வழிபட்டால் பாவஙகள் நீஙகும் என நம்புகின்றனர். ஆண்டொன்றுக்கு சராசரியாக 2 கோடி பேர் வருகை தருகிறார்கள். குறிப்பாக அமாவாசை தினஙகளில் பொதுசுகாதாரப்பணிகள் மிகவும் சிரத்தையுடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கோவிலுக்கு வழிபாட்டுக்கு செல்லும்முன் முதல் தீர்த்தமான அக்னிதீர்த்தத்தில் நீராடுகின்றனர். அக்னிதீர்த்தத்தில் நீராடுவதன் மூலம் யாத்திரிகர்கள் தஙகளின் வாழ்நாளில் செய்த பாவஙகள் நீஙகுவதாக நம்புகின்றனர்.<br><br>மேற்படி அக்னிதீர்த்தம் பகுதியில் நகராட்சியின் மூலம் Bio Digester Toilet அமைக்கப்பட்டுள்ளது. இவைகள் போதுமானதாக இல்லை. எனவே பொதுமக்கள் திருவிழா காலஙகளில் இப்பகுதியில் இயற்கை உபாதைகளால் சிரமஙகள் மேற்கொள்கின்றனர். இந்நிலையில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரையின்படி Lootel Model Toilet அமைக்க பொதுமக்கள் கூடும் இடஙகளான பேருந்து நிலையம், மார்க்கெட் பகுதி, வழிபாட்டுத்தலஙகள் மற்றும் புகைவண்டி நிலையம் ஆகிய பகுதிகளை இடஙகளை தேர்வு செய்ய நேரடியாக ஆய்வு செய்யப்பட்டது. இதன்படி Lootel Model Toilet | |

| | | |
|---|---|---|
| | நிறுவனர் திரு.யஷ்வந்த் சுதன் என்பவர் இராமேஸ்வரம் நகராட்சி பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டு அக்னிதீர்த்தம் பகுதி மற்றும் ஜே.ஜே.நகர் வாகன நிறுத்துமிடம் ஆகிய பகுதிகளில் மேற்படி Lootel Model Toilet அமைக்க ஏதுவான இடமாக இருக்குமென கருத்து தெரிவித்துள்ளார்கள்.<br><br>இராமேஸ்வரம் தீவு மேம்பாட்டுக்குழு கூட்டத்தின் போது இப்பொருள் குறித்து விவாதிக்கப்பட்டது. இதன்படி, மேற்படி அக்னி தீர்த்தம் பகுதிகளில் படி Lootel Model Toilet அமைக்க குழு உறுப்பினர்கள் பரிந்துரை செய்தார்கள். மேற்படி Lootel Model Toilet மேற்கூறியவாறு அக்னிதீர்த்ம் வடக்கு மற்றும் தெற்கு ஆகிய பகுதிகளில் 2 எண்ணம் அலகுகள் அமைக்கவும், ஜே.ஜே.நகர் வாகன நிறுத்துமிடத்தில் 1 எண்ணம் அமைக்கவும் தேவையான இட ஒதுக்கீடு செய்து தரக்கோரியுள்ளார்கள். இதன்படி மேற்படி பணிகள் மேற்கொள்ள இந்நிறுவனத்திடமிருந்து உரிய Expression of Interest (EGI) மற்றும் சுகுரு ஆகிய கருத்துருக்கள் பெறப்பட்டுள்ளது. மேற்படி கருத்துருக்களின் அடிப்படையில் இப்பகுதிகளில் தலா 200 ச.அடி ஒதுக்கி Lootel Model Toilet அமைக்க நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு உரிய பிரேரணைகள் சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு</u>:**<br><br>ஒப்புதல் அளிக்கலாம். | |
| **7** | இராமேஸ்வரம் நகராட்சி பகுதியில், வார்டு மறுவரையறை ஆணையத்தால் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டுதலின்படி, இந்நகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள தெருக்கள் இயற்கை அமைப்பின் கருத்தில் கொண்டும் / தெருக்கள் நகராட்சி பகுதியில் இயல்பான அமைப்பை | **தீர்மானம் எண். 99**<br>**<u>அனுமதிக்கப்பட்டது</u>** |

| | | |
|---|---|---|
| | கருத்தில் கொண்டும் வார்டுமறுவரையறை க்கான வரைவு கருத்துரு தயாரித்து , வரைபடஙகள், படிவஙகள் மற்றும் சான்றுகள் உரிய வழிமுறையாக மறுவரையறை ஆணையத்திற்கு அனுப்பப்பட்டு , கடிதம் ந.க.எண் 3127/2017/தே.பொ1–2 நாள் 28–12–2017ன் வாயிலாக ஒப்புதல் அளிக்கப்பட்டு, பொதுமக்கள், அரசியல் கட்சிகள் மற்றும் பல்வேறு அமைப்புகளின் ஆலோசனைகள், கருத்துக்கள் மற்றும் ஆட்சேபனைகளை தெரிவிக்க கோரி தினசரி நாளிதழ் வாயிலாகவும், நகராட்சி அலுவலகம் மற்றும் அரசு அலுவலகஙகளில் அறிவிப்பு பலகைகளிலும் வரைவு வார்டு மறுவரையறை கருத்துரு விளம்பரம் செய்யப்பட்டது. இதனை தொடர்ந்து பல்வேறு கருத்துக்கள் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் குறிப்பிட்டு பொதுமக்கள், அரசியல் கட்சிகள் மற்றும் பல்வேறு அமைப்புகளிடமிருந்து , இந்நகராட்சி வாயிலாகவும், இராமநாதபுரம் மாவட்டஆட்சியர் அவர்களின் வாயிலாகவும் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்கநர் மதுரை அவர்களின் வாயிலாகவும், நேரடியாக / தபால் மூலமாக/ மின்னஞ்சள் வழியாகவும் 75 மனுக்கள் வரப்பெற்றுள்ளது. இம்மனுக்களை பரிசீலனை செய்து, மேலாய்வு அலுவலர் அவர்களின் ஆய்வுக்குட்படுத்தப்பட்டு, மாவட்ட வரையறை அலுவலர் அவர்களின் உத்தரவிற்குபின் 33 மனுக்கள் ஏற்க்கப்பட்டு 42 மனுக்கள் நிராகரிக்கப்பட்டு , இறுதி வரைவு வார்டு மறுவரையறை கருத்துரு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. மேற்படி வார்டு மறுவரையறை கருத்துரு வரையறை ஆணையத்திற்கு உரிய வழிமுறையாக சமர்ப்பிக்க மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு:**<br><br>அனுமதிக்கலாம். | |

| | | |
|---|---|---|
| **8** | நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவின்பேரில் (ந.க.எண் 14989/P1/2016–2 நாள்:22.09.2017) 14வது மத்திய நிதிக்குழு பரிந்துரை நிதியின் கீழ் (2017–2018) ரூ.156.92 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தின்கீழ் இந்நகராட்சியில் சாலைப்பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு ரூ.120.00 இலட்சத்திற்கு இந்நகர்மன்றத் தீர்மானம் எண் 68 நாள்: 19.10.2017ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதன் பேரில் வார்டு எண்:15 சல்லிமலை பிரதான சாலையில் சிமிண்ட்சாலை அமைத்திட ரூ.20.00 இலட்சம் மதிப்பிலான பணிக்கு 17.01.2018 அன்று முதன்முதலாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.<br><br>1) திரு .G.M.சுதர்சன்பாபு ஒப்பந்ததாரர் இராமநாதபுரம் — மதிப்பீட்டைக்காட்டிலும் 0.01% குறைவு<br>2) திரு. K.P.முனியசாமி ஒப்பந்ததாரர் இராமேஸ்வரம் — மதிப்பீட்டைக்காட்டிலும் 0.16% கூடுதல்<br><br>மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.01% குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.G.M.சுதர்சன்பாபு அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம். மன்ற அனுமதிக்கு<br><br>**அலுவலகக்குறிப்பு:** | **தீர்மானம் எண். 100**<br><br>**அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| | மன்றம் அனுமதிக்கலாம். | |
| **9** | நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவின்பேரில் (ந.க.எண் 14989/P1/2016–2 நாள்:22.09.2017) 14வது மத்திய நிதிக்குழு பரிந்துரை நிதியின் கீழ் (2017–2018) ரூ.156.92 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தின்கீழ் இந்நகராட்சியில் சாலைப்பணிகள் மேற்கொள்ள ரூ.120.00 இலட்சத்திற்கு இந்நகர்மன்றத் தீர்மானம் எண் 68 நாள்: 19.10.2017 ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதன் பேரில் காட்டுப்பிள்ளையார் கோவில் வடக்குப் பகுதியில் சிமிண்ட்சாலை அமைத்திட ரூ.30.00 இலட்சம் மதிப்பிலான பணிக்கு 17.01.2018 அன்று முதன்முதலாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.<br><br>1) திரு .G.M.சுதர்சன்பாபு ஒப்பந்ததாரர் இராமநாதபுரம் — மதிப்பீட்டைக்காட்டிலும் 0.02% குறைவு<br>2) திரு. K.P.முனியசாமி ஒப்பந்ததாரர் இராமேஸ்வரம் — மதிப்பீட்டைக்காட்டிலும் 0.07% கூடுதல்<br><br>மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.02% குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.G.M.சுதர்சன்பாபு அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம். மன்ற ஒப்புதலுக்கு<br><br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>**<br><br>அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண். 101**<br>**<u>அனுமதிக்கப்பட்டது</u>** |

<table>
<tr><td>10</td><td>இராமேஸ்வரம் நகராட்சி குத்தகை இனஙகளுக்கான பொது ஏல அறிவிப்பினை மாலைமுரசு நாளிதழ் வாயிலாக பிரசுரம் செய்ததற்கு விளம்பர கட்டணம் ரூ.16800/— செலுத்த மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br><u>அலுவலகக்குறிப்பு:</u><br><br>அனுமதிக்கலாம்.</td><td>தீர்மானம் எண். 102<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>11</td><td>தொழில்வரி திருத்த அறிவிப்பினை தினத்தந்தி நாளிதழ் வாயிலாக பிரசுரம் செய்ததற்கு விளம்பர கட்டணம் ரூ.18711/— வழஙக மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br><u>அலுவலகக்குறிப்பு:</u><br><br>அனுமதிக்கலாம்.</td><td>தீர்மானம் எண். 103<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>12</td><td>இராமேஸ்வரம் நகராட்சியில் நடைபெற்றுவரும் திட்டப்பணிகள் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகளை நாளிதழில் விளம்பரம் செய்த வகைக்கு கீழ்காணும் நாளிதழ் நிறுவனஙகளுக்கு கட்டணத்தொகை வழஙக மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br><table><tr><td>வ.எண்</td><td>நாளிதழ் பெயர்</td><td>தொகை</td></tr><tr><td>1</td><td>தினத்தந்தி</td><td>29862</td></tr><tr><td>2</td><td>மதுரை மணி</td><td>28500</td></tr><tr><td>3</td><td>மாலைத்தமிழகம்</td><td>16800</td></tr></table></td><td>தீர்மானம் எண். 104<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>4</td><td>தினமலர்</td><td>45517</td></tr>
<tr><td>5</td><td>சாய் மீடியா</td><td>10500</td></tr>
<tr><td>6</td><td>மாலை முரசு</td><td>10500</td></tr>
<tr><td>7</td><td>அக்கார்டு ஏஜென்சி</td><td>53865</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு:</u><br>
அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>13</td>
<td>
இராமேஸ்வரம் நகராட்சி தொடர்பாக உயர்நீதிமன்றம் மதுரை கிளை மற்றும் இராமேஸ்வரம் நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ள வழக்குகள் தொடர்பாக கீழ்காணும் விபரப்படியான வழக்கறிஞர்களுக்கான கட்டணங்கள் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><td>வ.எண்</td><td>நாளிதழ் பெயர்</td><td>தொகை</td></tr>
<tr><td>1</td><td>எம்.கண்ணன்</td><td>19000</td></tr>
<tr><td>2</td><td>எஸ்.ஹரிஹரன்</td><td>27000</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு:</u><br>
அனுமதிக்கலாம்.
</td>
<td>தீர்மானம் எண். 105 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

**ஆணையாளர்/தனி அலுவலர்,**
இராமேஸ்வரம் நகராட்சி.